## தி.மு.க.வும் - அ.தி.மு.க.வும் ஒன்றல்ல; வேறு வேறு கட்சிகள்!

# ‘நீட்’ தேர்வு முறை ரத்து குறித்த தீர்மானத்தை தி.மு.க. ஆதரிக்கிறது!

## சட்டப் பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சென்னை, ஆக. 14 -**

**தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒன்றல்ல; வேறு வேறு கட்சிகள் எனவும் நீட் தேர்வு முறை ரத்து குறித்த தீர்மானத்தை தி.மு.க. ஆதரிக்கிறது எனவும் சட்டப் பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு பேசினார்.**

கழகக் கொறடா எ.வ.வேலு பேசியது வருமாறு:-

**எ.வ. வேலு:** இந்த Live Telecastக்கு முன்பு, இவ்வாறு பேசினால், பேரவைத் தலைவர் அவர்கள் அறைக்குச் சென்று, textஐப் படித்துவிட்டு எதை நீக்கலாம், என்ன நிலைமை என்று பார்க்கிற நடைமுறை ஏற்கெனவே இருந்தது. அப்போது பத்திரிகை நண்பர்களும் அதனை வெளியிடமாட்டார்கள். இப்போது அப்படியில்லை, இப்போது உங்களுடைய கட்டுப்பாட்டில் எல்லாமே liveல் போகிறது. உடனுக்குடன், அப்போதே தீர்வு கண்டால்தான் இதற்கு ஒரு முடிவு வருமேயொழிய, நீங்கள் பின்னால் ஆய்வு செய்வது என்ற முறையை கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். உங்களை order போடுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. ஏனென்றால் இது சட்டமன்றம்; உங்களுடைய கட்டுப்பாடு என்பது தெரியும். தகவலாக உங்களுக்கு நான் சொல்கிறேன். அப்போதைக்கு அப்போதே முடிவு எடுத்துவிடுவதுதான் சரியாக இருக்குமேயொழிய, அது பின்னால் எடுப்பது என்பது சரியாக வராது.

அந்தந்த ஆட்சி வருகிறபோது தகுதியானவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் எல்லா அரசாங்கமும் நினைப்பார்கள். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், 2006-2011 காலகட்டத்தில், வருவாய்த் துறையினுடைய recordஐ எடுத்துப்பார்க்கலாம். நீண்ட நெடிய காலமாக பட்டா இல்லையென்ற நிலையை மாற்றி, பத்தாண்டு காலம் எந்த இடத்தை அனுபவித்திருந்தாலும், அதை பட்டா செய்யலாம் என்று தளர்த்தி, அண்ணன் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பட்டா வழங்கினார்கள். தமிழ்நாடே பாராட்டியது. திராவிட மாடல் ஆட்சியில் ஏற்கெனவே ban இருந்தது. நகராட்சி பகுதியாக இருந்தால் 7 கி.மீ. முதல் 8 கி.மீ வரை பட்டா செய்யக்கூடாது என்று ban இருந்தது. அமைச்சரவையில், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தளபதியார் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா நகராட்சிகள், பேரூராட்சிகளில் இந்தத் தடையை எடுத்துவிட்டு பட்டா கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி அனைவருக்கும் ஏனென்றால் நகராட்சியில் ஒரு இடம் இருக்கிறது என்று சொன்னால் கோடிக்கணக்கில் போகும்.

அப்படிப்பட்ட இடத்தை பட்டா செய்துகொடுத்தார் என்றுதான் சொல்கிறோம். வேறொன்றுமில்லை.

அனிதாவினுடைய நிகழ்வு என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அது நிகழ்ந்துவிட்டது.

ஆனால், எங்களுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் அவர்கள், நேரடியாக அவரது இல்லத்திற்குச் சென்று கலந்துகொண்டு அவர்களுடைய தேவைகளையெல்லாம்கூட பூர்த்தி செய்தார்கள் என்பதை நான் பதிவு செய்கின்றேன்.



### ‘நீட்’ தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை!

இந்த நீட் தேர்வு முறையை இரத்து செய்ய வேண்டி, தலைவர் ராகுல் காந்தி அவர்களும் மாணவர்களுடன் இணைந்து அவர்கள் நலனுக்காகத் தொடர்ந்து போராடிவருகிறார். நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை. நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை. இது கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

காங்கிரஸ் பேரியக்கம் ஆட்சியிலிருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் அதில் பங்குபெற்றது என்பது தவறான செய்தி அல்ல, அது உண்மையான செய்திதான். அப்போது நாமக்கல்லைச் சார்ந்த செ.காந்திசெல்வன் என்பவர் அப்போது அரசின் துணை மந்திரியாக தான் இருந்தார். அப்போது அவர் நீட் தேர்வை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தவில்லை. பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியின் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக தெரிவிக்கிறேன்.

### தமிழ்நாட்டிற்கு ‘நீட்’ ஒத்து வராது எனக் கூறியவர் கலைஞர்!

குலாம் நபி ஆசாத் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த மூத்த அமைச்சர் ஆவார். அவர்தான் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திப் பேசினாரேயொழிய, நாடாளுமன்றத்தில் எப்போதுமே இணை அமைச்சர்கள் இதுபோன்றவற்றை அறிமுகப்படுத்த முடியாது; நாங்கள் இருந்தோம். ஆனால், அதே நேரத்தில் cabinetல் நாங்கள் தமிழ்நாட்டில் நீட் தேர்வை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த கலைஞர் தெரிவித்த கருத்தும் அந்த cabinetல் தெரிவிக்கப்பட்டது.

தெரிவிக்கப்பட்டது மட்டுமல்ல; அப்போது முதலமைச்ச ராக இருந்த கலைஞர் அவர்கள் ‘தமிழ்நாட்டிற்கு நீட் ஒத்து வராது, நாங்கள் அறிமுகப்படுத்த மாட்டோம், ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தெரிவித்து கடிதம் எழுதினார்கள். அவர்களும் தமிழ்நாட்டில் நாங்கள் நிறைவேற்ற மாட்டோம் என்றும், ஏற்றுக்கொள்கிற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளட்டும் என்றும் உத்தரவாதம் அளித்திருந்தார்கள். அதனால்தான் அவரது காலத்தில் தடை இருந்தது. அதன் பின்னர் மாநிலத்தினை ஆட்சி செய்த அம்மையார் அவர்கள் காலத்திலும் நீட் தேர்வு இங்கு வரவில்லை. அதுதான் வரலாறு.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நீங்கள் சொன்னதுபோல் சிறப்பாக பேசிக்கொண்டிருந்தார். நாம் அனைவரும் அவருடைய பேச்சை கவனித்துக் கொண்டுதான் இருந்தோம். கடைசியாக, இறுதியாக அவர் ஒரு கருத்தைச் சொல்கிறபொழுது, அமைச்சர் பெருமக்கள் எழுந்து, அதற்குரிய விளக்கங்கள் என்ற பெயரில் சிலவற்றையெல்லாம் சொன்னார்கள். அது அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டுகின்ற அளவிற்கு அந்த நிகழ்வு இங்கு நடைபெற்றுவிட்டது. அதற்காக நீங்கள் ஒரு நடுநிலையாக இருந்து ஏதோ ஒரு தீர்ப்பு சொல்வதற்காகத்தான் அமைதிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு support செய்ய வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான், ஏற்கெனவே வழக்கு மன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது ஒன்றும் தவறானது இல்லை என்று அவர் சொன்னார் அவ்வளவுதான். நீங்கள் அதற்காக அவருக்கு ruling கொடுக்கலாம். இல்லை, இல்லை நீங்கள் அதைச் சொல்லாதீர்கள் என்றுகூட சொல்லலாம். நாங்கள் இரண்டுபேரும் ஒன்றாக சேர்ந்துகொண்டு என்று ஒன்றைச் சொன்னீர்கள் பாருங்கள். அதுபோல் இல்லை. (குறுக்கீடுகள்) அதுமாதிரி கிடையாது. (குறுக்கீடுகள்) அந்த அவசியம் எங்களுக்குத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) அது எங்களுக்குத் தேவையில்லாத ஒன்று.

### உள்நோக்கம் கற்பிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை!

**பேரவைத் தலைவர்:** இருவரும் ஒன்றாக சேர்ந்துவிடுவீர்கள் என்றுதான் நான் சொன்னேன்.

**எ.வ. வேலு:** உங்களுடைய பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அதை நாங்கள் செய்யவும் மாட்டோம்.

நாங்கள் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில்தான் எங்களுக்கு அந்தஸ்தெல்லாம் கொடுத்து, எங்களை எதிர்க்கட்சி என்று வைத்திருக்கிறீர்கள்.

உங்களுடைய பேச்சை முழுமையாக, நடுநிலையாக நீங்கள் நடத்திக் கொண்டிருப்பதுதான் எங்களுக்குக் கொடுக்கிற பாதுகாப்பு. அவருக்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையில் ஏதோ ஒரு நிலையில் அப்படி நீங்கள் சொல்லிவிட்டீர்கள். ஆனால், அது அப்படியல்ல. நாங்கள் வேறு கட்சி; அவர்கள் வேறு கட்சி. அவர்களும் ஆண்ட கட்சி; நாங்களும் ஆண்ட கட்சி. அடுத்த முறை ஆள வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிற கட்சி எங்கள் கட்சி. அடுத்த முறை நாங்கள்தான் ஆள வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிற கட்சி, எங்கள் கட்சி. இப்படிப்பட்ட நிலையில், அவர்களுடைய பிரச்சினையில் நீங்கள் தீர்ப்பதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டுமேயொழிய, அந்தக் குற்றச்சாட்டில் நாங்கள் இல்லை. அது மாதிரி நாங்களும், அவர்களும் ஒன்றாக இல்லை.

### முரசொலி அலுவலகம் பஞ்சமி நிலம் அல்ல!

சமூக நீதித் துறை அமைச்சர் அவர்கள், இந்த முரசொலி அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் வழக்கு மட்டத்தில் இருப்பதாக ஒரு செய்தியைப் பகிர்ந்துகொண்டார்கள். அரசு வருவாய்த் துறையே முரசொலி இடம் என்பது பஞ்சமி நிலம் இல்லை என்று அரசே ஏற்கெனவே நீதிமன்றத்தில் சொல்லிவிட்டது. அதனால் முழுக்க முழுக்க முரசொலி அலுவலகம் என்பது ஏற்கெனவே வாங்கப்பட்டது. அது பொதுவெளியில்தான் இருக்கிறதேயொழிய, வருவாய்த் துறையில்தான் இருக்கிறதேயொழிய, அது பஞ்சமி நிலம் என்பது இல்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்! வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு!

சென்னை, ஆக. 14-

கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற் றும் வடக்கு மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் குறித்து சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு வருமாறு:-

வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம், வருகிற 16.8.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கில்”, கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றிட, சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில், நடைபெறும் இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், இரா.விடுதலை, பி.வில்சன்,எம்.பி., வழக்கறிஞர் ஆர்.கிரிராஜன், எம்.பி., ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திரு ப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு கிருஷ்ணகிரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, புதுச்சேரி -காரைக்கால் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உயர்நீதி மன்ற மற்றும் மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர்கள் - கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ அறவித்துள்ளார்.

---

## அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்

# கல்வி உதவித் தொகை தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடை!

## முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட – முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!

*சென்னை, ஆக.14-*

*அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் மாணவர் சேர்க்கை தடைபட்டுள்ளது. மாணவர்களின் எதிர்கால நலனை கருதி முதல்வர் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியிருப்பதாவது:*



*இங்கிலாந்து நாட்டில் உள்ள Manchester School of Architecture கல்வி நிறுவனத்தில் M.Arch படிக்க தேர்வான சென்னையைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு தமிழ்நாடு அரசின் “அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத் தின்” கீழ் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை நேரடியாக ஏற்க மறுத்துள்ள அந்த கல்வி நிறுவனம், இந்திய ஒன்றிய அரசின் மூலம் வழங்கப்பட் டால் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளது.*

*இந்த விவகாரம் தொடங்கி ஒரு மாதகாலம் ஆகும் நிலையிலும் உரிய தீர்வு எட்டப்படாமல் இருப்பதாக கிடைக்கும் தகவல்கள் கவலையைத் தருகின்றன. அதேபோல University of Leeds உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி சேரவிருந்த சில மாணவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை சென்று சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் காலக்கெடு முடிந்து, சேர்க்கை தடைபட்டு இருப்பதாகவும் தெரியவருகிறது.*

*மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இந்தப் பிரச்சினைகளை விரைவாக களைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.*

---

## ‘கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்’ என்ற நீதிமன்ற தீர்ப்பின்படி

# நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளை கட்டிட அரசு முன்வர வேண்டும்!

## இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

*சென்னை, ஆக.14-*

*‘கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்’ என்ற உயர்நீதிமன்ற உத்தரவினை ஏற்று, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள 6 கல்லூரிகளை ஏற்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

*தி.மு.க.வுக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்து கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அளித்துள்ள பேட்டி வருமாறு:-*



*திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் 10 கல்லூரிகள் திருக்கோயில்கள் சார்பில் கட்டப்படும் என்று திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலோடு அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பில் நான்கு கலைக் கல்லூரிகள் அந்த ஆண்டு டிசம்பர் மாதமே துவக்கப்பட்டது.*

*அந்த அரசாணையை எதிர்த்து அன்றைய தினம் உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி அவர்களிடம் இந்த அரசாணைக்கு தடை கேட்டு உயர் நீதிமன்றம் சென்ற நிலையில் அவர்கள் தடையாணைக்கு முன்பாகவே சென்னை கொளத்தூரிலேயும், திருச்செந்தூர் திருக்கோயில் சார்பிலேயும், அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் சார்பிலேயும், பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பிலேயும் நான்கு கல்லூரிகளும் வாடகை கட்டிடத்தில் துவங்கப்பட்டது.*

*நீதிமன்றத்தில் முறையாக அன்றைய தினம் அரசினுடைய தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் அவர்களின், அவர்கள் வாதத்தை அடுத்து நான்கு கல்லூரிகளுக்கும் தடை இல்லை இனி மேற்கொண்டு கல்லூரிகள் கட்டவேண்டுமென்றால், அறிவித்த அறிவிப்பிலே இருக்கின்ற ஆறு கல்லூரிகள் கட்டுவதற்கு நீதிமன்றத்தின் உத்தரவை பெற்று கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.*

*அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீடு மனுவாக உச்ச நீதிமன்றத்திற்கு சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலேயும் கல்லூரிகள் கட்டப்படுவது அறநிலையத்துறையின் கொடைகளின் சட்டத்தின்படி ஏற்புடையது என்று அங்கேயும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.*

*ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் அவர்கள் மீண்டும் இந்த கல்லூரிகள் கட்டுவதற்கு உண்டான வழிகாட்டி நெறிமுறைகள் ஒழுங்காக கடைபிடிக்கவில்லை என்று ஒரு வழக்கை பதிவு செய்திருந்தார்கள். அது நேற்றைக்கு உயர் நீதிமன்றத்திலே அந்த வழக்கு வந்தது .அந்த வழக்கின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு மாண்பமை பொருந்திய நீதியரசர் ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அந்த பெஞ்சிலே கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் தான், முறையானது தான், அறநிலைத்துறை என்பது அறக்கொடைகளின் சட்டப்படி அந்த கல்லூரிகள் கட்டப்பட்டது ஞாயம் என்ற தீர்ப்பை வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் அவருடைய திட்டத்தை நேற்றைக்கு உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மகிழ்ச்சியை தான் இன்றைக்கு உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளோம்.*

### 50 ஆண்டுகள் செய்ய வேண்டியதை 5 ஆண்டில் செய்த திராவிட மாடல் அரசு!

*மேலும் அவருடைய தீர்ப்பிலே இந்த நான்கு கல்லூரிகளில் இரண்டு கல்லூரிகள் கட்டப்பட்டு விட்டன. கபாலீஸ்வரர் திருக்கோயில் கொளத்தூர் கல்லூரியும் அதேபோல் பழனி ஆண்டவர் திருக்கோயிலுடைய பழனி ஆண்டவர் கல்லூரியும் கட்டப்பட்டு விட்டது.மீதம் இருக்கின்ற கல்லூரிகள் கட்டப்பட வேண்டும் அது திருக்கோயிலின் நிதி இருந்தால் ,திருக்கோயில் நிதியிலிருந்து கட்டலாம் அப்படி இல்லை என்றால் அரசு அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்து இருக்கின்றார்கள்.அந்த தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த இரண்டு கல்லூரிகளும் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு சொந்த கட்டிடத்தை கட்ட இந்த அரசு நீதிமன்ற தீர்ப்பின்படி முன்வர வேண்டும். அதோடு ஏற்கனவே நிலுவையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஆறு கல்லூரிகள் கடையம், கலசப்பாக்கம், அணைக்கட்டு திருக் காட்டுப்பள்ளி, அதேபோல் லால்குடி, சென்னை கீழ்பாக்கம் அந்த ஆறு கல்லூரிகளையும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முனைப்பு காட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

*இந்து சமய அறநிலையத் துறையை பொறுத்தவரையில் 50 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை 5 ஆண்டுகளில் நிறைவேற்றிய அரசு திராவிட மாடல் அரசு. ஆன்றோர்கள், சான்றோர்கள், பாராட்டுகின்ற அரசு, ஆத்திகர்கள் நாத்திகர்கள் என அனைவருக்கும் உண்டான அரசு என்பதை கடந்த காலம் நிரூபித்தது போல் இந்தாண்டும் கடந்த காலத்தினுடைய திட்டங்களை அவர்களுடைய வழிகாட்டுதலாக எடுத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் என்ற முறையில் எனது கோரிக்கையை வைக்கிறேன்.*

***செய்தியாளர்:** சார் இப்ப இருக்கின்ற இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பல்வேறு குற்றச்சாட்டு களையும் விமர்சனங்களையும் முன்வைத்துக் கொண்டிருக்கின்றார் அதைப்பற்றி*

***பி.கே.சேகர்பாபு:** நான் முன்னரே ஏற்கனவே சொன்னது போல் சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும், இல்லாததையும் பொல்லாததையும் வாய்க்கு வந்தபடி பேசுவது நாகரிகம் அல்ல தக்கச் சான்றோடு அவர் எடுத்துக் கூறினால் பதில் சொல்ல தயாராக இருக்கிறோம் என்று பேட்டி அளித்தார்.*